**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 360/2018.**
**வழக்கு சாட்சி – அ.சா. 2.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜபருல்லாகனி. | ஜாதி | |
| தந்தை பெயர் | முகமது இஸ்மாயில். | தொழில் விவசாயம். | |
| கிராமம் | உத்தமபாளையம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 58/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.10.2025.

**(1, 4, 5, 6, 7, 9 ஆகிய எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, உத்தமபாளையத்தில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி. ஜெயவீரன், பார்வதியம்மாள், துரைசிங்கம், மன்மதன், சுந்தர், செல்வன், அன்பழகன், பஞ்சவர்ணம், ரத்தினம் ஆகியோர்களை எனக்கத் தெரியாது. கடந்த 26.04.1995–ஆம் தேதியன்று காக்கில்சிக்கையன்பட்டியைச் சேர்ந்த லட்சுமி, பொன்னையா ஆகியோர்களிடம், நானும், என் சகோதரர்களான முஸ்தபா கனி, கரீம்கனி ஆகியோர்கள் சர்வே எண். 428/1, 428/2 எண் கொண்ட நிலத்தைக் கிரையம் பெற்றிருந்தோம். மேற்படி நிலத்தை கருணாநிதி என்பவரிடம் குத்தகைக்காக விட்டிருந்தோம். அதைப் பார்க்கமுடியவில்லை என்று கூறி, மேற்படி நிலத்தை எங்களிடமே ஒப்படைத்துவிட்டார். அதன்பின்னர், மேற்படி நிலத்தை எங்களது அண்ணன் அகமது கனி பார்த்துக்கொண்டிருந்தார். நாங்கள் கடன் வாங்குவதற்காக மேற்படி நிலத்தின் மீது வில்லங்கச் சான்றிதழ் கேட்டபோது, ஜெயவீரன் மற்றும் சிலர்

எங்களது நிலத்தை விற்றிருப்பது தெரியவந்தது. அதனால் நாங்கள் தேனி, மாவட்டக் குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் எங்களை அழைத்து விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நாங்கள், புகார் சொத்தை எந்த சமயத்திலும் நானும், எனது சகோதரர்களும் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு கிரையம் கொடுத்த லட்சுமி, பொன்னையாத்தேவர், அதிவீரணத்தேவரிடம் பெற்றக் கிரையம் ஆவண எண். 107/1990 என்பது பெரியகுளம் கூட்டுறவு சங்கம் துணைப் பதிவாளர் அவர்களால் கடந்த 06.09.1993–ம் தேதி L.No. 4/1993–ல் பிறப்பித்த உத்தரவுப்படி இரத்து செய்யப்பட்டது என்றாலும், மேற்படி சொத்தை விற்பதற்கு லட்சுமி, பொன்னையாத்தேவர் ஆகியோர்களுக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. லட்சுமி, பொன்னையாத்தேவர் ஆகியோர்களுக்கு இல்லாத சொத்தை கிரையம் பெற்றதால் எங்களுக்கு அந்த சொத்தில் எவ்வித உரிமை மூலம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. லட்சுமி, பொன்னையாத்தேவர் ஆகியோர்களால் பெறப்பட்ட கிரையம் இரத்து செய்யப்பட்டது தெரிந்தே, நானும், என் சகோதரர்களும் மோசடியாக கிரையம் பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 08.09.1998–ஆம் தேதி மேற்படி சின்னவீரத்தேவரின் மனைவி பார்வதியம்மாள் மற்றும் அவரது மக்கள் மூக்கையா, ஜெயவீரன் ஆகியோர்கள் சேர்ந்து, மேற்படி சின்னவீரணத்தேவர், அனுந்தன்பட்டி கூட்டுறவு வங்கியில் வாங்கிய அடைமானக் கடனை செலுத்தி, இரசீது பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல, மேற்படி கடனை நானும், என் சகோதரர்களும் சேர்ந்துதான் செலுத்தினோம். நாங்கள் செலுத்தியதற்கு ஆவணம் உள்ளதா? என்றால் உள்ளது. நான் சொல்வதுபோல் நாங்கள் அடைமானக் கடன் செலுத்தவில்லை என்றாலும், அதுபோல் ஒரு ரசீது எங்களுக்கு வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. உத்தமபாளையம்

உரிமையியல் நீதிமன்றத்தில் நானும், எனது சகோதரர்களும் சேர்ந்து ஜெயவீரன் வகையறாமீது தாக்கல் செய்த வழக்கு, தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும், மேற்படி தள்ளுபடி உத்தரவின்மீது, உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இடைக்கால மனு எண். 380/2003-ஐத் தாக்கல் செய்து, அந்த மனு கடந்த 19.01.2004-ம் தேதி தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. புகாரில் கண்ட சொத்தை கடந்த 09.07.2008-ம் தேதி 6-வது எதிரி செல்வம் கிரையம் பெற்று, தற்போதுவரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. சொத்திற்கு உரிமையில்லாத நபரிடம் கிரையம் பெற்று, தற்போது, சொத்தை அபகரிக்க வேண்டும் என்று, எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை :</u>

இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2025.10.08 17:26:22 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**